செ.வெ.எண்: 83 நாள்: 31.01.2020

**கொரோனா வைரஸ் குறித்த தேவையற்ற வதந்திகளை நம்ப வேண்டாம்.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் அறிவுறுத்தல்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (31.01.2020) பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கொரோனா வைரஸ் பரவுதல் குறித்து மிகுந்த விழிப்புணர்வோடும், எச்சரிக்கையோடும், கவனத்தோடும் தொடர் கண்காணிப்பில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முழு கவனத்தோடும் எடுக்கப்பட்டு வருகிறது. விமானநிலையத்தில் கொரோனா வைரஸ் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக சீனாவில் இருந்து வரக்கூடிய பயனிகள் மற்றும் மாணவர்களை சென்னை விமான நிலையத்தில் முழுமையாக நேரடி மருத்துவ பரிசோதனை செய்து தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் இருந்து இன்றுவரை 242 நபர்கள் தமிழகத்திற்கு வந்தடைந்துள்ளனர். இவர்கள் பொதுசுகாதாரத்துறையின் தொடர்பில் உள்ளார்கள். இந்த 242 நபர்களும் எவ்வித பாதிப்புமின்றி இயல்பாக உள்ளனர். தமிழத்தில் கொரோனா வைரஸ் இல்லை. பொதுமக்கள் கொரோனா வைரஸ் குறித்து பதட்டப்படவோ, பீதியடையவோ தேவையில்லை. அதேநேரத்தில் அனைத்து பொதுமக்களும் சுகாதாரத்துறை எடுக்கின்ற வேண்டுகோளினை ஏற்று முன்னெச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை உள்ளிட்ட அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் தனிமைபடுத்தப்பட்ட வார்டு, பாதுகாப்பு உபகரணங்கள், தேவையான மருத்துவ உபகரணங்கள் என அனைத்து வசதிகளுடன் சிகிச்சை அளிக்கும் வகையில் தயார் நிலையில் உள்ளது.

கேரளாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு ஒருவருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுநோயாக இருப்பதால் பொதுமக்கள் கவனத்தோடும், எச்சரிக்கையோடும் இருக்க வேண்டும். பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்குவதுடன், பொதுமக்கள் தன் சுத்தம் பேண வேண்டும். பொதுமக்கள் பள்ளி, கல்லூரி, பேருந்துநிலையங்கள், அலுவலகங்கள், இரயில் நிலையங்கள், சந்தைகள், திரையரங்கம், வணிக வளாகங்கள் போன்ற பல்வேறு பொதுஇடங்களுக்கு சென்று வீடு திரும்பும் பொழுது கைகளை சோப்பு அல்லது சோப்பு திரவம் கொண்டு நன்றாக கை கழுவும் பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும். இதன்மூலம் எவ்வித தொற்றுநோயும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய முடியும்.

இதுகுறித்து பொதுமக்களிடையே அதிக அளவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊடகத்துறையினருக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இதுகுறித்து விழிப்புணர்வை பொதுமக்களிடையே அனைவரும் இணைந்து எடுத்துசெல்ல வேண்டும்.

கேரளாவில் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, அங்குள்ள மருத்துவ அலுவலர்களுடன் நமது சுகாதாரத்துறையினர் உரிய தொடர்பில் உள்ளனர். தினமும் மத்திய சுகாதாரத்துறையின் உயர் அலுவலர்கள் தமிழக சுகாதாரத்துறை அலுவலர்களுடன் நேரடி காணொலிக்காட்சி வாயிலாக தொடர்பில் உள்ளனர். இதேபோன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து சுகாதாரத்துறை அலுவலர்களுக்கும் காணொலிக்காட்சி மூலம் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களில் கொரோனா வைரஸ் குறித்து பரப்பப்படும் தவறான தகவல்களை யாரும் நம்ப வேண்டாம். மேலும் பொதுசுகாதாரத்துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் அதிகாரபூர்வமாக பொதுமக்களுக்கு தினமும் தகவல்கள் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**